மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No.97/2024

வாக்குமூலம்: வா.சா.2 – மணி

06.08.2025:

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கும் வாதிக்கும் என்ன உறவு என்றால் வாதிக்கு நான் தம்பி ஆவேன். நான் நிரூபண வாக்குமூலத்தை படித்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு யாருக்கிடையில் நடக்கிறது என்றால் வாதியின் கொழுந்தனார் ஆன பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தில் தற்போது யார் குடியிருந்து வருகிறார் என்றால் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார். எத்தனை வருடங்களாக குடியிருக்கிறார் என்றால் 1 வருடமாக குடியிருந்து வருகிறார். வழக்குச் சொத்தில் உள்ள வீட்டை யார் கட்டினார்கள் என்றால் வெள்ளையம்மாள் வாதியின் கணவர் முருகன் கட்டினார். மேற்படி வீடு எத்தனை வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஆகும். வாதியின் வீட்டிற்கு எப்போது பட்டா வாங்கினார் என்றால் 2018 ல் வாங்கினார். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரனம் என்றால் அகலம் சுமார் 25 அடி, நீளம் 40 அடி இருக்கும். வழக்குச் சொத்திற்கு பட்டா எண்.165/1 ஆகும். வாதிக்கு என்ன என்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் பட்டா, வீட்டு வரி ரசீது, நான்குமால், சிட்டா ஆகிய ஆவணங்கள் ஆகும். வழக்குச் சொத்திற்கு நான்குமால் கிழக்கு செல்வி ராஜேந்திரன் வீடு, மேற்கு – ரம்யா கணேஷன் வீடு, வடக்கு – ரோடு, தெற்கு – நல்லதம்பி கவுண்டர் அவர்களின் தோப்பு உள்ளது. வாதிக்கு வழக்கு சொத்தை தவிர வேறு எங்கும் வீடு இல்லை. நான் மேற்சொன்ன நான்குமால் தாசில்தார் அவர்கள் வாதிக்கு கொடுத்த

சான்றின் உள்ள நான்கின் மாலிற்கு வேறுபட்டு உள்ளது என்றாலும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தில் உள்ள வீடானது திருமூர்த்தி மற்றும் முருகன் ஆகியோரின் தந்தை கட்டி வீடு என்றாலும், மேற்படி வீட்டை பிரதிவாதிக்கு கொடுத்து விட்டார் என்றாலும், வாதி பொய்யான ஆவணங்களை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. மேற்படி வீட்டை வெள்ளையம்மாள் திருமூர்த்திக்கு எப்போது ஒப்படைப்பு செய்துள்ளார் என்றால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒப்படைப்பு செய்தார். எந்த தேதி என்று எனக்கு ஞாபகமில்லை. வாதி, பிரதிவாதியை எப்போது வெளியேறச் சொன்னார் என்றால் சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்னர். தேதி ஞாபகமில்லை. நிரூபண வாக்குமூலத்தில் தேதியை குறிப்பிட்டு சொல்லிவிட்டு தற்போது தேதி ஞாபகமில்லை என்று சொல்வதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு வீடு வெள்ளையம்மாளுக்கு மட்டுமல்லாமல் பிரதிவாதிக்கும் பாத்தியம் உள்ளது அதனால் தான் பிரதிவாதி அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் எனக்கும் ஏதாவது பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் பிரச்சனை செய்ததால் தான் அவருக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/—சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.